**கவனிக்க** .– *2016. 01. 29 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1953 - 2016 පෙබරවාරි මස 05 වැනි සිකුරාදා - 2016.02.05

*1953ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | – |
| சட்டமூலங்கள் | – |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | – |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | – |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | – |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | – |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | – |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | – |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 26 |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | – |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | – |
| நொத்தாரிசுமார் பெயர் பட்டியல் | – |
| நானாவித அறிவித்தல்கள் | 27 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | – |

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2016, பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, பெப்புருவரி மாதம் 12ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## பிசுக்கால் ஏல விற்பனை

கடுவெல மாவட்ட நீதி மன்றம்

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் 1990 ஆம் ஆண்டு 2 ஆம் இலக்க (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மற்றும் அதனுடன் சார்ந்த தீர்வுக் கட்டளை மற்றும் முற்றான கட்டளை தொடர்பான காரணம் ஒன்று ;

வழக்கு இல. : 600/DR/ M/
தன்மை : DR
நடவடிக்கை:
சுருக்கம் பெறுமதி: 3.5 மில்லியன்

கம்பஹா மாவட்ட நீதிமன்றம் எஸ்கீசி இல.: 106/15. )

ஹற்றன் நஷனல் வங்கீ பி எல் சி ( முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி)

பதிவு அலுவலகம் : இல. 479( முன்பு 481), டி பி ஜாயா மாவத்தை, கொழும்பு -10.
கிளை இல. 496/ ஏ, அவிஸ்ஸாவலை வீதி, கடுவலை

வழக்காளி

-எதிர்-

1. கோட்டகே சஞ்சீவ பிரியதர்ஷன
2. ஹேவா விதான கட்டடிகே காஞ்சனா மதுமாலி இருவரும்
இல. 466/3, பெரகஸ் சந்தி, பியகம.

எதிராளி

மேற்படி இலக்கம் கொண்ட வழக்கில் எனக்கு வெளியிடப்பட்டுள்ள விற்பனை செய்யும் அதிகாரத்துவப் பத்திரம் பற்றி இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்கள் 2015.10.21 ஆம் திகதி என்னால் தடை செய்யப்பட்ட பின்னர் மேற்படி பெயரிடப்பட்ட முற்றிலாக் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழக்காளி வங்கிக்கு செலுத்துவதை தவறியுள்ள படியால் ரூபா 3, 343, 685. 86 தொகையும் பிராத்தின் திகதியில் இருந்து முற்றிலாக் கட்டளை வெளியிடப்பட்ட திகதி வரை சட்டப்படியான வட்டியும், மேலும் ரூபா3,343, 685. 86 தொகையும் சேர்த்து 2011.09.18 ஆம் திகதியிலிருந்து முற்றிலாக் கட்டளை உள்ளடக்கும் திகதி வரை வருடத்திற்கு 22% கணக்கிடப்பட்ட வட்டியும் அதன் பின் அத் திகதியிலிருந்து தீர்வுக் கட்டளைப்படி முழுத் தொகையை செலுத்தி முடியும் வரை அத் தொகை மீது சட்டப்படியான வட்டியுடன் வழக்கு செலவீனங்களும் எதிராளிகளால் வழக்காளிக்கு செலுத்த வேண்டும் என கட்டளையிடப்பட்டுள்ளதுடன், குறித்த தொகையை செலுத்துவதற்கு எதிராளிகள் தவறியுள்ளபடியால்,

2016, பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு மேற்படி பெயரிடப்பட்ட எதிராளியின் ஆதனங்கள் அமைந்துள்ள இடத்தில் என்னால் பிசுக்கால் ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படும்.

ஏலம் முடிவடைந்தவுடன் உத்தேசக் கொள்வனவாளர் விற்பனை விலையின் 25% தொகையும், நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள கட்டணங்களின் படி அரசாங்க கட்டணங்களும், விற்பனைத் தொகையிலிருந்து 25% ஆன ஏலதாரர் தரகு பணமும், உள்ளூராட்சி சபை கட்டணங்கள் 1% உம், ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு செலவுகளும் ஏலதாரர்களுக்கு செலுத்த வேண்டும். மேலும் கொள்வனவாளரால் மிகுதி 75% த்தை ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் அவ்வழக்குக்குப் பற்றாக குறித்த நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட வேண்டியதுடன், அதற்காக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய இரு பிணையாட்களை அதே தருணத்தில் முன்வைத்து விற்பனை நிபந்தனைகளுக்கு கையொப்பமிட வேண்டும்.

### அட்டவணை

மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின் சியனா கோரளை, அதிகாரி பத்துவ, பியகம முதலீட்டு வலயத்தில், பியகம பிரதேசத்தில் அமைந்துள்ள "மொரகஹவத்த அல்லது வலவ்வத்த" என்ற காணியில் அனுமதி பெற்ற அளவையாளர் கே. ஏ. ரூபசிங்க அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1994. 02. 09 ஆந் திகதிய இல. 81/ 1994 என்ற வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 27 என்ற காணித் துண்டுக்கு எல்லைகள்- வடக்கு: காலஞ்சென்ற ஆர். ஏ. பீரிஸ் பெரேரா அவர்கள் உரிமை கோரும் ஆதனம்; கிழக்கு: இந்த ஆதனத்தின் துண்டு 26 மற்றும் துண்டு டி( 20 அடி பாதைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது) ; தெற்கு: துண்டு டி ( 20 அடி பாதைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது) மற்றும் மேற்கு: கால்வாய் மற்றும் அதன் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 17 பே.) ஆவதுடன் அதனுள் அமைந்துள்ள மரங்கள், பழங்கள், கட்டிடங்கள், கொண்ட சகலதும். இக் காணி வரைபட இல. 81/ 1994 கம்பஹா காணி பதிவாளர் அலுவலகத்தில் C 666/141 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கீழ்க்காணும் பாதைக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளை பயன்படுத்தும் உரிமை மற்றும் ஏனைய உரிமைகளுடன் ஆகும்.

1. அனுமதி பெற்ற அளவையாளர் டி.ஜே. நாணாயக்கார அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1971.12.13 ஆம் திகதிய இல. 1614 என்ற வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள துண்டு,

2. இல. 81/1994 என்ற வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள துண்டு டி ( 20 அடி பாதைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது)

பதிவுகாரர்/ உதவி பிஸ்கல்,
மாவட்ட நீதி மன்றம்,
கம்பஹா.

2016, சனவரி 18.

2-54

# நானாவித அறிவித்தல்கள்

## கொழும்பு மேல் மாகாண மேல் நீதிமன்றம் (கொழும்பில் அதன் குடியியல் நியாயாதிக்கத்தை பிரயோகிக்கையில்)

ஒடுக்கப்படுவதற்கான அறிவித்தல்

H.C(குடியியல் வழக்கு இல. : 53/ 2015/CO)

K.D.Ebert & Sons Holdings( Private) Limited (PV11787) இல. 10, வஜிர வீதி, கொழும்பு 04 இல் உத்தியோகபூர்வ அலுவலகத்தைக் கொண்ட கம்பனியின் கலைத்தல் தொடர்பான அறிவித்தல்;

வரையறுக்கப்பட்ட Bitumix( தனியார்) கம்பனி இல.9, பங்கிரிவத்தை மாவத்தை, மிரிஹானை , நுகேகொடை.

மனுதாரர்

இத்தால் சகலரும் அறியும்படியான அறிவித்தல் யாதெனில் மேற்குறித்த கம்பனி, மேல்மாகாண உயர் நீதிமன்றத்தினால் (கொழும்பில் அமையப்பெற்றுள்ளது) தன்னுடைய குடியியல் நியாயாதிக்கத்தின் படி 2015.11.12 அன்று இல. 9 பங்கிரிவத்தை மாவத்தை, மிரிஹானை, நுகேகொடையில் அமையப்பெற்றுள்ள வரையறுக்கப்பட்டுள்ள Bitumix(தனியார்) கம்பனி கலைத்தல் தொடர்பான மனுவின் பிரகாரம் 2016. 05. 04 அன்று இவ்விடயம் நீதிமன்றத்தில் அழைக்கப்படும். மேலும் குறித்த எந்தவொரு கடன்கொடுநர் அல்லது பங்கு வகிப்போர் இவ்விடயத்தை ஆதரிக்கவோ, அல்லது எதிர்வாதம் முன்வைக்கவோ விரும்பின் மேற்குறித்த மனு விசாரிக்கப்படும் போது குறித்த நபரோ அல்லது அவரால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணியோ நீதிமன்றத்தின் முன் சமுகமளிக்க வேண்டும். குறித்த கட்டணங்களுக்கு அமைவாக குறித்த மனுவின் குறித்த கம்பனியின் கடன்கொடுனருக்கோ அல்லது பங்குவகிப்போருக்கோ வழங்கப்படும்.

கையொப்பம் :

M/ S F.J. and G. De Seram,
Attorneys at Law,
2016, De Seram Place,Colombo- 10.

**குறிப்பு**.- மேற்குறித்த மனு தொடர்பில் நீதிமன்றத்தில் சமுகம் தர விரும்பும் எவரும் தம்முடைய சமுகமளித்தல் தொடர்பான அறிவித்தலை எழுத்தில் மேற்குறித்த F.J. and G. De Seram , Attorneys at Law விற்கு அறியத்தர வேண்டும். குறித்த அறிவித்தலானது அறிவித்தலை விடுப்பவரின் பெயரையும், முகவரியையும் தெளிவாக உள்ளடக்கியிருக்க வேண்டும். மேலும் குறித்த அறிவித்தல் குறித்த நபரினால் அல்லது நிறுவனத்தால் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணியால் ( நியமிக்கப்பட்டால்) கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும். குறித்த அறிவித்தலானது நேரடியாக அல்லது தபாலில் வழங்கப்பட முடியும். தபாலில் அறிவித்தலை அனுப்பும் போது தபால் வந்து சேருவதற்கான நியாயமான கால இடைவெளியில் தபாலிலிடப்பட வேண்டும். இத்தபால் 2016. 05. 03 ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

2-69

---

## இலங்கை அரபுக் கல்லூரிகளின் ஒன்றியத்தினை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

இம்ரான் மஹ்ரூப் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 48 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "இலங்கை அரபுக் கல்லூரிகளின் ஒன்றியத்தினை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம்செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த ஒன்றியத்திணைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:-

(1) சிறார்களின் கல்வியை மேம்படுத்தல்;

(2) இனங்களுக்கிடையில் சமாதானத்தினை வளர்த்தல் ;

(3) கல்வி வளர்ச்சிக்காக அரபுக் கல்லூரிகளை ஒருங்கிணைத்தல்

பிறவும்.

இம்ரான் மஹ்ரூப்,
பாராளுமன்ற உறுப்பினர்,
திருகோணமலை மாவட்டம்.

2-210

---

## ஹேண்ட் டு ஸ்டான்ட் பவுண்டேஷனைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் வைத்திய கலாநிதி காவிந்த ஜயவர்தன ஆகிய நான், "ஹேண்ட் டு ஸ்டான்ட் பவுண்டேஷனைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம்செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்:-

பின்வரும் பொது குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த ஹேண்ட் டு ஸ்டான்ட் பவுண்டேஷனைக் கூட்டிணைப்பதே இச் சட்ட மூலத்தின் நோக்கமாகும் :-

(அ) நாடெங்கிலுமுள்ள அனுகூலம் குறைந்தோருக்கு உதவியையும் தருணங்களையும், தொழில் அற்றோருக்கு தமது தேர்ச்சி, திறன்களின் அடிப்படையில் தொழில் பெறச் செய்து அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவன் மூலம் நிலையான அபிவிருத்தியை ஊக்குவிக்க பொருத்தமான அதிகாரிகளுக்கு உதவியளித்தல்;

(ஆ) மாற்றுத்திறனாளிகள் அடங்கலாக தேவைப்படும் பிள்ளைகளுக்கு , பாதுகாப்பு மற்றும் கல்வி ஆகியவற்றை வழங்குவதுடன் உதவி வழங்கல் மற்றும் அன்பை பொழிதல் ஆகியவற்றிற்கான பிற அமைப்பிற்கான பிற அமைப்புக்கள் அத்துடன் பாடசாலைகள், இல்லங்கள் ஆகியவற்றை தாபித்து பராமரிக்கும் உரித்தான அதிகாரிகளுக்கு உதவி வழங்கல் ;

(3) இயற்கை அனர்த்தங்கள் போன்றவற்றினால் தாக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் உரித்தான அதிகாரிகளுக்கு உதவி வழங்கல்.

பிறவும்.

காவிந்த ஜயவர்தன,
கௌரவ மருத்துவ கலாநிதி,
பாராளுமன்ற உறுப்பினர்,
கம்பஹா மாவட்டம்.

2-216

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும்** www.documents.gov.lk **எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து** மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

**அட்டவணை - 2016**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 05.02.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.01.2016 |
| | | வெள்ளி | 12.02.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.01.2016 |
| | | வெள்ளி | 19.02.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.02.2016 |
| | | வெள்ளி | 26.02.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.02.2016 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 04.03.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.02.2016 |
| | | வெள்ளி | 11.03.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.02.2016 |
| | | வெள்ளி | 18.03.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.03.2016 |
| | | வியாழன் | 24.03.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.03.2016 |
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 01.04.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.03.2016 |
| | | வெள்ளி | 08.04.2016 | .. | நண்பகல் 12 | வியாழன் | 24.03.2016 |
| | | வெள்ளி | 15.04.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.04.2016 |
| | | வெள்ளி | 22.04.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.04.2016 |
| | | வெள்ளி | 29.04.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.04.2016 |

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.